

### ஆந்திர வனத்துறையினரால் கொலை செய்யப்பட்ட

# தொழிலாளிகளின் குடும்பத்திற்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும்

## மக்கள் கண்காணிப்பகம் அமைப்பினர் தமிழக அரசுக்கு கோரிக்கை

தர்மபுரி, டிச.13-

ஆந்திர வனத்துறையினரால் தொழிலாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து மக்கள் கண்காணிப்பகம் சார்பில் நடத்தப்பட்ட கள ஆய்வு அறிக்கையை அதன் இயக்குனர் ஹென்றி திபேன் நேற்று தர்மபுரியில் வெளியிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

தர்மபுரி மாவட்டம், சித்தேரி மலை கிராமத்தை சேர்ந்த கூலித்தொழிலாளிகள் ர்ாமன், பாலகிருஷ்ணன். இவர்கள் 2 பேரும் சமீபத்தில் ஆந்திர வனத்துறையினரால் திட்டமிட்டு கொல்லப்பட்டு இருக்கின்றனர். இவர்களின் மனைவிகள் தற்போது வாழ்வாதாரத்திற்கு வழியின்றி விதவைகளாக தவித்து வருகின்றனர். இவர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாக தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும். இந்த சம்பவத்தில் நேர்மையான உயர் காவல்துறை அதிகாரி நியமித்து, ஆந்திர வனத்துறை அதிகாரிகளுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யவேண்டும். அப்பாவி மலைவாழ் பழங்குடி இனத்தை சேர்ந்த கூலித்தொழிலாளர்களை ஆசை வார்த்தைகளை கூறி செம்மரம் வெட்ட அழைத்து செல்லும் புரோக்கர்களை கண்டுபிடித்து காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். நிகழ்ச்சியில் மக்கள் கண்காணிப்பகத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஆசீர்வாதம், திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன், மண்டல ஒருங்கிணைப்பாளர் செந்தில் ராஜா, இறந்த தொழிலாளர்களின் மனைவிகள் உண்ணாமலை, மங்கம்மாள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.